



# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மானியக் கோரிக்கை எண். 34

அறிவிப்புகள்

2017–2018

## 34. கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் மற்றும் திருப்பூர் மாவட்டம் அவினாசி ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் மற்றும் திருப்பூர் மாவட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 500 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் 1,40,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்பாடு குறித்து ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 35. திருச்சி மாவட்டம் தொட்டியம் ஊராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், திருச்சி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 138 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் 55,928 நபர்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 36. அருப்புக்கோட்டை சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளிலுள்ள 2,04,575 நபர்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்பாடு குறித்து ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.